[1983 பிப்ரவரி 4

திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூருக்கு அருகில் உள்ள குலசேகரப் பட்டிணம் கடற்கரையோரத்தில், கடலிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஏதாவது அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள விஞ்ஞானத் தொழில் நுட்ப இலாகா ஐ.ஐ.டி. சென்னை; பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு ஒன்று உருவாக்கப்பட்டு இருக்கிறது. ஒரு மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஓஷன் எனர்ஜி திட்டம். ஒன்று லட்சத் தீவிலும், மற்றொன்று குலசேகர பட்டணத்திலும் ஏற்பாடு செய்யலாம் என்று அதற்கான விவரங்களைச் சேகரித்து வருகிறார்கள்.

மேல்மணி முத்தாறு நீர்மின் திட்டம்

*வினா எண். 22—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பலகோடி ரூபாய் செலவில் மேல்மணிமுத்தாறு நீர் மின் திட்டம் செயல்படுத்த தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்?

(உ) எப்பொழுது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்-

(ஆ) மத்திய மின் அதிகாரக் குழுவின் அறிவுரையின் பேரில் இத்திட்டத்திற்கான திருத்திய திட்ட அறிக்கை தயாரிக்கும் பொருட்டு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(இ) ஆய்வுப்பணிகள் முடிந்த பிறகு இத்திட்டத்தின் மதிப்பீடு தெரியவரும்.

(ஈ) 45 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகும்.

(உ) ஆய்வுப்பணிகள் முடிந்து, மத்திய அரசு ஒப்புதல் கிடைத்தவுடன் வேலை துவங்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1982 பிப்ரவரி 4]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த மேல் மணிமுத்தாறு திட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அந்தப் பக்கத்தில் சிங்கவால் குரங்குகள் இருப்பதனால் தடை ஏதோ இருப்பதாக வன இலாகா தடை செய்திருந்ததே, தற்போது அதற்கு வன இலாகா சம்மதத்தை அளித்திருக்கிறதா? இந்தத் திட்டத்தை விரைவாக முடிப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க எண்ணி உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வனத் துறையினர் இந்தத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளைச் செய்வதற்குத் தங்கள் ஒப்புதலை அளித்துள்ளனர். அதன் பேரில் எஞ்சிய ஆய்வுப் பணிகளை இப்பொழுது மின்சார வாரியம் மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்திற்குக் கேரள அரசால் வழங்கப்படும் மின்சாரம்

*வினா எண். 23—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்குக் கேரள அரசு தற்பொழுது கொடுக்கும் மின்சாரத்தின் அளவை அதிகரித்துக் கொடுக்கும் வாய்ப்பு உள்ளதா?

(ஆ) தற்பொழுது நாளொன்றுக்கு எவ்வளவு யூனிட் மின்சாரம் கேரள அரசு தமிழக அரசுக்குக் கொடுக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தற்பொழுது கேரள மின்வாரியம் 1981-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு நாளொன்றுக்குச் சராசரியாக 3 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் வழங்கி வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கேரளத்திலிருந்து நாம் பெறும் மின்சாரத்தின் விலையை அதிகரிக்க வேண்டும் என்று கேரளத்தில் அமைந்துள்ள புதிய அரசு கேட்டுள்ளதா? அப்படியானால், கேரள அரசிலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலையும் கர்நாடகத்திலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலையும் எந்த வகையில் வித்தியாசப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?